
# LORDS TODAY


LORDS TODAY - International Social Media & Magazine
LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | Issue : April 2022
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & O wner : Lords. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS

LORDS
CLUBS INTERNATIONAL
Govt. Reg. No.:1359/2013
INTERNATIONAL SOCIAL SERVICES


2021- 16796675766






BIBLE 15




KURAN 15





BHAGAVAD GITA 15

மபால்ராஜ்
Founder | International President



| 1st started | 2nd started | 3rd started | 4th started |
| --- | --- | --- | --- |
| CHRISTIANITY | BUDDHISM | ISLAM | HINDUISM |





# தலையங்கம்...

நீ கருவரைக்கு செல்லும் போது மட்டும்

யார் கண்களுக்கும் தெரியாத அணுக்களாய் இரு!

நீ கருவறையை விட்டு வெளியில் செல்லும்போது மட்டும்

உனது கண்கள் கலங்கி அழும் குழந்தைகளாய் இரு!

நீ பள்ளிகல்லூரிகளுக்கு செல்லும் போது மட்டும் மாண்புமிகு மாணவர்களாய் இரு!

நீ வேலைக்கு செல்லும்போது மட்டும் தொழிலாளிகளாய் இரு!

நீ பூமியில் அனைத்து நாடுகளிலும் உயிர் வாழும் போது ஒற்றுமையாய் மனிதநேய மிக்க மனிதர்களாய் இரு!

நீ பூமியில் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் உறுப்பினர்களாகி பிற உயிரினங்களுக்கு உதவி செய்யும்போது கடவுள்களாய் இரு!

நீ இந்து கோவில்களுக்குள் செல்லும்போது மட்டும் இந்துக்களாய் இரு!

நீ கிருஸ்தவ தேவாலயங்களுக்கு செல்லும்போது மட்டும் கிறிஸ்தவர்களாய் இரு!

நீ இஸ்லாமிய மசூதிக்குகளுக்குள் செல்லும்போது மட்டும் இஸ்லாமியர்களாய் இரு!

நீ இறுதியாய் இறுதிப் பயணம் செல்லும்போது மட்டும் உன்னை சார்ந்தவர்களின் கண்களை கலங்க வைக்கும் அமைதியான பிணமாய் இரு!

நீ பின்னர் புதைக்கப்பட்டால் எலும்புகளாய் இரு!

நீ எரிக்கப்பட்டால் மீண்டும் அணுக்களை போன்று யார் கண்களுக்கும் தெரியாது சாம்பல் துகள்களாய் இரு!

ஆகவே அனைத்து உயிரினங்களும் அணுக்களாக தோன்றி அணுக்களாகவே மறையும் நிரந்தரமற்ற சில காலங்கள் மட்டுமே பூமியில் உயிர் வாழும் தற்காலிக உயிரினங்கள் தான் என்ற உண்மையை இந்த பூமியில் உள்ள அனைத்து மனிதர்களும் நன்கு உணர வேண்டும்.




லார்ட்ஸ் மபால்ராஜ்

**LORDS TODAY**
RNI Ref. No. : 1287921 Title Code : TNBL04354
International social media and magazine
Editor | Publisher | and Owner

**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No. : 1359/2013
International social service clubs
International President | and Founder
Web : www.lordsclubs.com

# BIBLE

## மெகா தொடர்

**PART-15**




## தொடக்கநூல் அதிகாரம் – 32 – திருவிவிலியம்

1 பின்னர், யாக்கோபு தம் பயணத்தைத் தொடர்ந்தார். கடவுளின் தூதர்கள் வழியில் அவரைச் சந்தித்தார்கள்.

2 யாக்கோபு அவர்களைக் கண்டபோது, இதுதான் கடவுளின் படை என்று கூறி, அந்த இடத்திற்கு மகனயிம் என்று பெயரிட்டார்.

3 பின்பு, யாக்கோபு ஏதோம் நாட்டிலுள்ள சேயிர் பகுதியில் வாழ்ந்து வந்த தம் சகோதரன் ஏசாவிடம் தூதரை அனுப்பினார்.

4 அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது: நீங்கள் என் தலைவன் ஏசாவிடம் போய், உம் ஊழியனாகிய யாக்கோபு கூறுவது: நான் இதுவரை லாபானிடம் அந்நிந்நியனாய் தங்கியிருந்தேன்.

5 மாடுகளும், கழுதைகளும், ஆடுகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும் எனக்கு உள்ளனர். உம் பார்வையில் எனக்குத் தயை கிடைக்கும்படி என் தலைவரான உமக்கு ஆளனுப்பி அறிவிக்கிறேன் என்று சொல்லுங்கள்.

6 அத்தூதர் யாக்கோபிடம் திரும்பி வந்து, நாங்கள் உம் சகோதரர் ஏசாவிடம் போனோம். அவர் இதோ நானூறு பேருடன் உம்மைச் சந்திக்க வருகிறார் என்றனர்.


7 யாக்கோபு மிகவும் அஞ்சிக் கலங்கித் தம்முடன் இருந்த ஆள்களையும், ஆடுமாடு ஒட்டகங்களாகிய மந்தைகளையும் இரு பகுதிகளாகப் பிரித்தார்.

8 ஏனெனில், ஏசா வந்து ஒரு பகுதியைத் தாக்கினாலும் எஞ்சிய பகுதியாவது தப்புமே என்று நினைத்துக் கொண்டார்.

9 மேலும், யாக்கோபு, என் மூதாதை ஆபிரகாமின் கடவுளும் என் தந்தை ஈசாக்கின் கடவுளுமான ஆண்டவரே! நீர் என்னை நோக்கி, உன் சொந்த நாட்டிற்கும் உன் உறவினரிடமும் திரும்பிப் போ; நான் உனக்கு நன்மையே புரிவேன் என்று உரைத்தீர்.

10 அடியேனுக்கு நீர் காட்டிய பேரன்பு முழுவதற்கும் நம்பிக்கைக்குரிய தன்மை முழுவதற்கும் நான் தகுதியற்றவன். நான் இந்த யோர்தானைக் கடந்து சென்றபோது என்னிடமிருந்தது ஒரு கோல் மட்டுமே. இப்போதோ, இரண்டு பரிவாரங்கள் உடையவன் ஆனேன்.

# BIBLE




11 என் சகோதரர் ஏசாவுக்கு நான் மிகவும் அஞ்சுகிறேன். அவர் கையினின்று
என்னை விடுவித்தருளும். இல்லையேல் அவர் வந்து என்னையும்
பிள்ளைகளையும், தாய்களையும் தாக்குவார்.

12 நீர் நான் உனக்கு உறுதியாக நன்மை புரிவேன்; உன் வழிமரபை எண்ண
முடியாத கடல் மணலைப் போலப் பெருகச் செய்வேன் என்று
வாக்களித்துள்ளீர் என்றார்.

13 அன்றிரவு அவர் அங்கேயே தங்கி, தமக்குச் சொந்தமானவற்றிலிருந்து

14 சகோதரர் ஏசாவுக்கு அன்பளிப்பாக இருநூறு வெள்ளாடுகளையும்,
இருபது வெள்ளாட்டுக் கிடாய்களையும், இருநூறு
செம்மறியாடுகளையும், இருபது செம்மறிக் கிடாய்களையும்,

15 முப்பது பெண் ஒட்டகங்களையும் அவற்றின் குட்டிகளையும், நாற்பது
பசுக்களையும், பத்துக் காளைகளையும், இருபது பெண் கழுதைகளையும்,
பத்து ஆண் கழுதைகளையும் தேர்ந்தெடுத்தார்.

16 அவற்றுள் ஒவ்வொரு மந்தையையும் வேலைக்காரர் கையில்
தனித்தனியாய் ஒப்புவித்து, நீங்கள் மந்தைகளுக்கு இடையே
இடம்விட்டு, எனக்குமுன் ஓட்டிக்கொண்டு போங்கள் என்று
சொன்னார்.


17 பின்பு, அவர் முதலில் போகிறவனை நோக்கிக் கட்டளையிட்டுக் கூறியது:
என் சகோதரர் ஏசா உனக்கு எதிர்ப்பட்டு, நீ யாருடைய ஆள்? நீ எங்கே
போகிறாய்? உனக்கு முன் செல்லும் இவை யாருடையன? என்று
உன்னிடம் கேட்டால்,

18 இவை உம் ஊழியன் யாக்கோபினுடையவை. அவர் தம் தலைவராகிய
ஏசாவுக்கு இவற்றை அன்பளிப்பாக அனுப்பியிருக்கிறார். அவரும் எங்கள்
பின்னர் வருகிறார் என்று நீ சொல்வாய் என்றார்.

19 அதேவிதமாய் அம்மந்தைகளை ஓட்டிச் செல்லும் இரண்டாம், மூன்றாம்
ஆள்களுக்கும் மற்ற அனைவருக்கும் கட்டளையிட்டுக் கூறியது:
ஏசாவை நீங்கள் சந்திக்கும்பொழுதும்,

20 இதோ, உம் ஊழியன் யாக்கோபு எங்கள் பின்னால் வருகிறார் என்று
சொல்லுங்கள் . ஏனெனில், யாக்கோபு நான் அவர் முன்னே
இவ்வன்பளிப்புகளை அனுப்பி அவரை அமைதிப்படுத்துவேன். பின்பு,
நான் அவரை நேரில் காணும்பொழுது, அவர் ஒருவேளை என்னை ஏற்றுக்
கொள்வார் என்று நினைத்தார். யாக்கோபு இஸ்ரயேல் என்ற
பெயர் பெறுதல்

# BIBLE




21 அவ்விதமே யாக்கோபின் அன்பளிப்புகள் அவருக்கு முன் சென்றன. அவரோ அன்றிரவு கூடாரத்தில் தங்கினார்.

22 அந்த இரவிலேயே அவர் எழுந்து, தம் இரு மனைவியரையும் இரு வேலைக்காரிகளையும் புதல்வர் பதினொருவரையும் அழைத்துக் கொண்டு யாபோக்கு ஆற்றின் துறையைக் கடந்தார்.

23 அப்படி அவர்களை ஆற்றைக் கடக்கச் செய்தபோது, தமக்கிருந்த அனைத்தையும் அனுப்பி வைத்தார்.

24 யாக்கோபு மட்டும் இவ்வாறு தனித்திருக்க, ஓர் ஆடவர் பொழுது விடியுமட்டும் அவரோடு மற்போரிட்டார்.

25 யாக்கோபை வெற்றி கொள்ள முடியாதென்று கண்ட அந்த ஆடவர் அவரது தொடைச்சந்தைத் தொட்டார். யாக்கோபு அவரோடு மற்போரிடுகையில் தொடைச் சந்து இடம் விலகியது.

26 அப்பொழுது ஆடவர் என்னைப் போகவிடு; பொழுது புலரப்போகிறது என, யாக்கோபு, நீர் எனக்கு ஆசி வழங்கினாலொழிய உம்மைப் போகவிடேன் என்று மறுமொழி சொன்னார்.


27 ஆடவர், உன் பெயர் என்ன? என,

28 அவர்: நான் யாக்கோபு என்றார். அப்பொழுது அவர், உன்பெயர் இனி யாக்கோபு எனப்படாது, இஸ்ரயேல் மீ எனப்படும். ஏனெனில், நீ கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி கொண்டாய் என்றார்.

29 யாக்கோபு அவரை நோக்கி உம் பெயரைச் சொல்லும் என்றார். அவர் என் பெயரை நீ கேட்பதேன்? என்று, அந்த இடத்திலேயே அவருக்கு ஆசி வழங்கினார்.

30 அப்பொழுது யாக்கோபு, நான் கடவுளின் முகத்தை நேரில் கண்டும் உயிர் தப்பிப் பிழைத்தேன் என்று சொல்லி, அந்த இடத்திற்குப் பெனியேல் மீமீ என்று பெயரிட்டார்.

# BIBLE



31 அவர் பெனியேலுக்கு அப்பால் சென்றவுடன் கதிரவன் தோன்றினான். தொடை விலகியதால் அவரும் நொண்டி நொண்டி நடந்தார்.

32 அதன் பொருட்டு, இஸ்ரயேலர் இந்நாள்வரை தொடைச் சந்துச் சதைநாரை உண்பதில்லை. ஏனென்றால், அந்த ஆடவர் யாக்கோபின் தொடைச் சந்துச் சதைநாரைத் தொட்டார்.

## தொடக்கநூல் அதிகாரம் – 33 – திருவிவிலியம்

யாக்கோபு ஏசா சந்திப்பு

1 யாக்கோபு தம் கண்களை உயர்த்திப் பார்க்க, ஏசா நானூறு ஆள்களோடு வருவதைக் கண்டார். உடனே அவர் லேயாவிடமும் ராகேலிடமும் இரு வேலைக்காரிகளிடமும் பிள்ளைகளைப் பிரித்து ஒப்படைத்தார்.

2 முதல் வரிசையில் வேலைக்காரிகளையும் அவர்களுடைய பிள்ளைகளையும், இரண்டாம் வரிசையில் லேயாவையும், அவருடைய பிள்ளைகளையும், இறுதியில் ராகேலையும் யோசேப்பையும் நிறுத்தினார்.

3 அவர் அவர்களுக்கு முன் சென்று தம் சகோதரரை நெருங்கிச் செல்கையில் ஏழு முறை தரையில் வீழ்ந்து அவரை வணங்கினார்.


4 ஏசாவோ அவருக்கு எதிர் கொண்டு ஓடி அவரை அரவணைத்து இறுகக் கட்டித்தழுவி முத்தமிட்டார். இருவரும் மகிழ்ச்சிக் கண்ணீர் சிந்தினர்.

5 பின் கண்களை உயர்த்தி, பெண்களையும் அவர்களின் பிள்ளைகளையும் கண்டு, உன்னோடு இருக்கும் இவர்கள் யார்? என்று கேட்டார். அவரும் உம் அடியானாகிய எனக்குக் கடவுள் கருணையுடன் அருளிய பிள்ளைகளே இவர்கள் என்று பதில் சொன்னார்.

6 அப்பொழுது வேலைக்காரிகளும் அவர்களுடைய பிள்ளைகளும் அணுகி அவரை வணங்கினர்.

7 அவ்வாறே லேயாவும் அவருடைய பிள்ளைகளும் வணங்கினர். இறுதியாக யோசேப்பும் ராகேலும் நெருங்கி வந்து வணங்கினர்.

# BIBLE




8 அப்போது ஏசா யாக்கோபை நோக்கி, எனக்கு எதிர்கொண்டு வந்த
பரிவாரம் எதற்காக? என்று கேட்டார். யாக்கோபு, என்
தலைவராகிய உம் பார்வையில் எனக்குத் தயை கிடைப்பதற்காக என்று
பதில் சொன்னார்.

9 ஏசா, என் சகோதரனே, ஏற்கெனவே என்னிடம் மிகுதியாக உள்ளது.
உன்னுடையதை நீயே வைத்துக்கொள் என்றார்.

10 யாக்கோபு, இல்லை. உமது பார்வையில் எனக்குத் தயை
கிடைத்திருப்பது உண்மையானால் நான் தரும் அன்பளிப்பை ஏற்றுக்
கொள்ளும். உமது முகத்தைக் காண்பது கடவுளின் முகத்தைக்
காண்பதுபோல் இருக்கிறது. ஏனெனில், நீர் எனக்குக் கனிவு
காட்டியுள்ளீர்.

11 எனவே, உமக்கு அடியேன் கொண்டு வந்துள்ள அன்பளிப்பைத் தயவு
செய்து ஏற்றுக் கொள்ளும். ஏனெனில், கடவுளின் கருணையினால் எனக்கு
வேண்டிய மட்டும் உள்ளது என்று சொல்லி வற்புறுத்த, அவரும்
அவற்றைப் பெற்றுக்கொண்டார்.

12 பிறகு, அவர் நாம் சேர்ந்து பயணம் செய்வோம். உனக்குமுன் நான்
செல்வேன் என்றார்.

13 அதற்கு யாக்கோபு, பச்சிளங்குழந்தைகளும் பால் கொடுக்கும் ஆடு,
மாடுகளும் என்னிடம் உள்ளன என்று என் தலைவராகிய உமக்குத்
தெரியும். அவற்றை ஒரே நாளில் வருத்தி ஓட்டிக் கொண்டு வந்தால், என்
மந்தையெல்லாம் செத்துப் போகும்.


14 தலைவராகிய நீர் எனக்குமுன்னே செல்வீராக! நானோ மந்தைகள்,
பிள்ளைகளின் நடைக்கு ஏற்ப மெதுவாக வந்து சேயிரில் உம்மைச்
சந்திப்பேன் என்றார்.

15 அதற்கு ஏசா, அப்படியானால் என்னுடைய ஆள்களில் சிலரை
உன்னிடம் விட்டுச் செல்கிறேன் என்று சொல்ல, அவர் வேண்டாம்;
என் தலைவராகிய உமது பார்வையில் எனக்குத் தயை கிடைத்ததே
போதும் என்றார்.

16 ஆகையால், ஏசா அன்றே புறப்பட்டு, தாம் வந்த வழியே சேயிருக்குத்
திரும்பினார்.

17 யாக்கோபு சுக்கோத்தை வந்தடைந்தவுடன், அங்கே தமக்கென்று ஒரு வீடு
கட்டினார். தம் மந்தைகளுக்குக் குடில்களை அமைத்தார். இதனால் அந்த

# BIBLE




இடத்திற்குச் சுக்கோத்து மீ என்று பெயரிட்டார்.


18 இவ்வாறு யாக்கோபு பதான் அராமிலிருந்து திரும்பி வந்தபின் கானான்
நாட்டைச் சார்ந்த செக்கேம் நகருக்கு நலமுடன் வந்து சேர்ந்தார்.
அந்நகருக்கு எதிரே பாளையம் இறங்கினார்.

19 கூடாரமடித்துத் தங்கிய அந்நிலப்பகுதியை செக்கேமின் தந்தை
ஆமோரின் புதல்வரிடமிருந்து நூறு வெள்ளிக்காசுக்கு அவர் விலைக்கு
வாங்கினார்.

20 பின்பு, அங்கே அவர் ஒரு பலிபீடத்தை எழுப்பி அதற்கு ஏல்
எலோகே இஸ்ரயேல் மீ என்று பெயரிட்டார்.




www.lordsclubs.com lordsclubsinternational@gmail.com +91 9840559673





2:236 لَا جُنَاحَ عَلَيْكُمْ اِنْ طَلَّقْتُمُ النِّسَآءَ مَا لَمْ تَمَسُّوْهُنَّ اَوْ تَفْرِضُوْا لَهُنَّ فَرِيْضَةً ۖ
وَّمَتِّعُوْهُنَّ عَلَى الْمُوْسِعِ قَدَرُهٗ وَعَلَى الْمُقْتِرِ قَدَرُهٗ ۚ مَتَاعًا ۢ بِالْمَعْرُوْفِ ۚ حَقًّا عَلَى الْمُحْسِنِيْنَ

2:236. பெண்களை நீங்கள் தீண்டுவதற்கு முன், அல்லது அவர்களுடைய மஹரை நிச்சயம் செய்வதற்கு முன், தலாக் சொன்னால் உங்கள் மீது குற்றமில்லை ஆயினும் அவர்களுக்குப் பலனுள்ள பொருள்களைக் கொடு(த்து உதவு)ங்கள் - அதாவது செல்வம் படைத்தவன் அவனுக்குத் தக்க அளவும், ஏழை அவனுக்குத் தக்க அளவும் கொடுத்து, நியாயமான முறையில் உதவி செய்தல் வேண்டும்; இது நல்லோர் மீது கடமையாகும்.

2:237 وَاِنْ طَلَّقْتُمُوْهُنَّ مِنْ قَبْلِ اَنْ تَمَسُّوْهُنَّ وَقَدْ فَرَضْتُمْ لَهُنَّ فَرِيْضَةً فَنِصْفُ مَا فَرَضْتُمْ اِلَّآ
اَنْ يَّعْفُوْنَ اَوْ يَعْفُوَا الَّذِىْ بِيَدِهٖ عُقْدَةُ النِّكَاحِ ۚ وَاَنْ تَعْفُوْٓا اَقْرَبُ لِلتَّقْوٰى ۚ وَلَا تَنْسَوُا الْفَضْلَ بَيْنَكُمْ ۚ
اِنَّ اللّٰهَ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ

2:237. ஆயினும், அப்பெண்களைத் தீண்டுவதற்கு முன் - ஆனால் மஹர் நிச்சயித்த பின் நீங்கள் தலாக் சொல்வீர்களாயின், நீங்கள் குறிப்பட்டிருந்த மஹர் தொகையில் பாதி(அவர்களுக்கு) உண்டு- அப்பெண்களோ அல்லது எவர் கையில் (அத்)திருமணம் பற்றிய பிடி இருக்கிறதோ அவர்களோ (முழுமையும்) மன்னித்து விட்டாலன்றி; - ஆனால், (இவ்விஷயத்தில்) விட்டுக் கொடுப்பது தக்வாவுக்கு (பயபக்திக்கு) மிக்க நெருக்கமானதாகும்; இன்னும், உங்களுக்கிடையே (ஒருவருக்கொருவர்) உபகாரம் செய்து கொள்வதையும் மறவாதீர்கள் - நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை பார்(த்துக் கூலி கொடு)ப்பவனாக இருக்கின்றான்.

2:238 حَافِظُوْا عَلَى الصَّلَوٰتِ وَالصَّلٰوةِ الْوُسْطٰى وَقُوْمُوْا لِلّٰهِ قٰنِتِيْنَ



2:238. தொழுகைகளை (குறிப்பாக) நடுத்தொழுகையை பேணிக் கொள்ளுங்கள்; (தொழுகையின்போது) அல்லாஹ்வின் முன்னிலையில் உள்ளச்சப்பாட்டுடன் நில்லுங்கள்.

2:239 فَإِنْ خِفْتُمْ فَرِجَالًا أَوْ رُكْبَانًا ۚ فَإِذَآ أَمِنْتُمْ فَاذْكُرُوا اللَّهَ كَمَا عَلَّمَكُمْ مَّا لَمْ تَكُونُوا
تَعْلَمُونَ

2:239. ஆயினும், (பகைவர்களையோ அல்லது வேறெதையுமோ கொண்டு) நீங்கள் பயப்படும் நிலையில் இருந்தால், நடந்து கொண்டோ அல்லது சவாரி செய்து கொண்டோவாகிலும் தொழுது கொள்ளுங்கள்; பின்னர் நீங்கள் அச்சம் தீர்ந்ததும், நீங்கள் அறியாமல் இருந்ததை அவன் உங்களுக்கு அறிவித்ததைப் போன்று, (நிறைவுடன் தொழுது) அல்லாஹ்வை நினைவு கூறுங்கள்.

2:240 وَالَّذِينَ يُتَوَفَّوْنَ مِنْكُمْ وَيَذَرُونَ أَزْوَاجًا ۖ وَصِيَّةً لِأَزْوَاجِهِمْ مَتَاعًا إِلَى الْحَوْلِ غَيْرَ
إِخْرَاجٍ ۚ فَإِنْ خَرَجْنَ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ فِي مَا فَعَلْنَ فِي أَنْفُسِهِنَّ مِنْ مَعْرُوفٍ ۗ وَاللَّهُ عَزِيزٌ حَكِيمٌ

2:240. உங்களில் எவரேனும் மனைவியரை விட்டு இறக்கும் நிலையில் இருப்பார்களானால், தங்கள் மனைவியருக்கு ஓராண்டு வரை (உணவு, உடை போன்ற தேவைகளைக் கொடுத்து) ஆதரித்து, (வீட்டை விட்டு அவர்கள்) வெளியேற்றப்படாதபடி (வாரிசுகளுக்கு) அவர்கள் மரண சாசனம் கூறுதல் வேண்டும்; ஆனால், அப்பெண்கள் தாங்களே வெளியே சென்று முறைப்படி தங்கள் காரியங்களைச் செய்து கொண்டார்களானால், (அதில்) உங்கள் மீது குற்றமில்லை - மேலும் அல்லாஹ்

வல்லமையுடையவனும், அறிவாற்றல் உடையோனும் ஆவான்.

2:241 حَقًّا عَلَى الْمُتَّقِيْنَ وَلِلْمُطَلَّقٰتِ مَتَاعٌ ۢ بِالْمَعْرُوْفِ

2:241. மேலும், தலாக் கொடுக்கப்பட்ட பெண்களுக்கு நியாயமான முறையில் சம்ரட்சணை பெறுவதற்குப் பாத்தியமுண்டு (இது) (முத்தகீன்(பயபக்தியுடையவர்)கள் மீது கடமையாகும்.

2:242 كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ لَـكُمْ اٰيٰتِهٖ لَعَلَّكُمْ تَعْقِلُوْنَ


2:242. நீங்கள் தெளிவாக உணர்ந்து (அதன்படி நடந்து வருமாறு) அல்லாஹ் உங்களுக்குத் தன்னுடைய வசனங்களை இவ்வாறு விளக்குகிறான்.

2:243 | فَقَالَ لَهُمُ اللّٰهُ مُوْتُوْا | اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ خَرَجُوْا مِنْ دِيَارِهِمْ وَهُمْ اُلُوْفٌ حَذَرَ الْمَوْتِ
كُرُوْنَ اِنَّ اللّٰهَ لَذُوْ فَضْلٍ عَلَى النَّاسِ وَلٰـكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يَشْ ثُمَّ اَحْيَاهُمْ

2:243. (நபியே!) மரண பயத்தால் தம் வீடுகளைவிட்டும், ஆயிரக்கணக்கில் வெளியேறியவர்களை நீர் கவனிக்கவில்லையா? அல்லாஹ் அவர்களிடம் "இறந்து விடுங்கள்" என்று கூறினான்; மீண்டும் அவர்களை உயிர்ப்பித்தான்; நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது பெரும் கருணையுடையவன்; ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் நன்றி செலுத்துவதில்லை.

2:244 وَقَاتِلُوْا فِىْ سَبِيْلِ اللّٰهِ وَاعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ سَمِيْعٌ عَلِيْمٌ

2:244. (மு∴மின்களே!) நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) செவிமடுப்பவனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றான் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.




مَنْ ذَا الَّذِىْ يُقْرِضُ اللّٰهَ قَرْضًا حَسَنًا فَيُضٰعِفَهٗ لَهٗۤ اَضْعَافًا كَثِيْرَةً 2:245 وَاللّٰهُ يَقْبِضُ
وَيَبْصُۜطُ ۖ وَاِلَيْهِ تُرْجَعُوْنَ

2:245. (கஷ்டத்திலிருப்போருக்காக) அல்லாஹ்வுக்கு அழகிய கடன் எவர் கொடுக்கின்றாரோ, அதை அவருக்கு அவன் இரு மடங்காக்கி பன்மடங்காகச் செய்வான் - அல்லாஹ்தான் (உங்கள் செல்வத்தைச்) சுருக்குகிறான்; (அவனே அதைப்)பெருக்கியும் தருகிறான்; அன்றியும் நீங்கள் அவனிடமே மீட்டப்படுவீர்கள்.

اَلَمْ تَرَ اِلَى الْمَلَاِ مِنْۢ بَنِىْۤ اِسْرَآءِيْلَ مِنْۢ بَعْدِ مُوْسٰى 2:246 اِذْ قَالُوْا لِنَبِىٍّ لَّهُمُ ابْعَثْ لَنَا مَلِكًا
نُّقَاتِلْ فِىْ سَبِيْلِ اللّٰهِ ؕ قَالَ هَلْ عَسَيْتُمْ اِنْ كُتِبَ عَلَيْكُمُ الْقِتَالُ اَلَّا تُقَاتِلُوْا ؕ قَالُوْا وَمَا لَنَاۤ اَلَّا نُقَاتِلَ
فِىْ سَبِيْلِ اللّٰهِ وَقَدْ اُخْرِجْنَا مِنْ دِيَارِنَا وَاَبْنَآٮِٕنَا ؕ فَلَمَّا كُتِبَ عَلَيْهِمُ الْقِتَالُ تَوَلَّوْا اِلَّا قَلِيْلًا مِّنْهُمْ ؕ وَاللّٰهُ
عَلِيْمٌ ۢ بِالظّٰلِمِيْنَ

2:246. (நபியே!) மூஸாவுக்குப்பின் இஸ்ரவேல் மக்களின் தலைவர்களை நீர் கவனித்தீரா? அவர்கள் தம் நபியிடம்: "நாங்கள் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவதற்காக ஓர் அரசனை ஏற்படுத்துங்கள்" என்று கூறிய பொழுது அவர், "போர் செய்தல் உங்கள் மீது கடமையாக்கப் பட்டால், நீங்கள் போரிடாமல் இருந்துவிடுவீர்களா?" என்று கேட்டார்; அதற்கவர்கள்: "எங்கள் மக்களையும், எங்கள் வீடுகளையும்விட்டு நாங்கள் வெளியேற்றப்பட்டபின், அல்லாஹ்வின் பாதையில் நாங்கள் போரிடாமல் இருக்க எங்களுக்கு என்ன வந்தது?" எனக் கூறினார்கள்; எனினும் போரிடுமாறு அவர்களுக்குக் கட்டளையிடப்பட்ட பொழுதோ அவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றறெல்லோரும் புறமுதுகுக் காட்டித்


திரும்பிவிட்டனர் - (இவ்வாறு ) அக்கிரமம் செய்வோரை அல்லாஹ் நன்கறிவான்.

قَالُوْٓا اَنّٰى يَكُوْنُ لَهُ الْمُلْكُ عَلَيْنَا وَقَالَ لَهُمْ نَبِيُّهُمْ اِنَّ اللّٰهَ قَدْ بَعَثَ لَـكُمْ طَالُوْتَ مَلِكًا 2:247
زَادَهٗ بَسْطَةً فِى قَالَ اِنَّ اللّٰهَ اصْطَفٰىهُ عَلَيْكُمْ وَنَحْنُ اَحَقُّ بِالْمُلْكِ مِنْهُ وَلَمْ يُؤْتَ سَعَةً مِّنَ الْمَالِ
وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ وَاللّٰهُ يُؤْتِىْ مُلْكَهٗ مَنْ يَّشَآءُ الْعِلْمِ وَ الْجِسْمِ

2:247. அவர்களுடைய நபி அவர்களிடம் "நிச்சயமாக அல்லாஹ் தாலூத்தை உங்களுக்கு அரசனாக அனுப்பியிருக்கிறான்" என்று கூறினார்; (அதற்கு) அவர்கள், "எங்கள் மீது அவர் எப்படி அதிகாரம் செலுத்த முடியும்? அதிகாரம் செலுத்த அவரை விட நாங்கள் தாம் தகுதியுடையவர்கள்; மேலும், அவருக்குத் திரண்ட செல்வமும் கொடுக்கப்படவில்லையே!" என்று கூறினார்கள்; அதற்கவர், "நிச்சயமாக அல்லாஹ் உங்களைவிட (மேலாக) அவரையே தேர்ந்தெடுத்திருக்கின்றான்; இன்னும், அறிவாற்றலிலும், உடல் வலிமையிலும் அவருக்கு அதிகமாக வழங்கியுள்ளான் - அல்லாஹ் தான் நாடியோருக்குத் தன் (அரச) அதிகாரத்தை வழங்குகிறான்; இன்னும் அல்லாஹ் விசாலமான (கொடையுடைய)வன்; (யாவற்றையும்) நன்கறிபவன்" என்று கூறினார்.

ةٌ مِّمَّا تَرَكَ اٰلُ وَقَالَ لَهُمْ نَبِيُّهُمْ اِنَّ اٰيَةَ مُلْكِهٖۤ اَنْ يَّاْتِيَكُمُ التَّابُوْتُ فِيْهِ سَكِيْنَةٌ مِّنْ رَّبِّكُمْ وَبَقِيَّ 2:248
ـكُمْ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ اِنَّ فِىْ ذٰلِكَ لَاٰيَةً لَّ مُوْسٰى وَاٰلُ هٰرُوْنَ تَحْمِلُهُ الْمَلٰٓـئِكَةُ

2:248. இன்னும், அவர்களுடைய நபி அவர்களிடம், "நிச்சயமாக அவருடைய அரசதிகாரத்திற்கு அடையாளமாக உங்களிடம் ஒரு தாபூத் (பேழை) வரும்; அதில் உங்களுக்கு, உங்கள் இறைவனிடம்




இருந்து ஆறுதல் (கொடுக்கக் கூடியவை) இருக்கும்; இன்னும், மூஸாவின் சந்ததியினரும்; ஹாரூனின் சந்ததியினரும் விட்டுச் சென்றவற்றின் மீதம் உள்ளவையும் இருக்கும்; அதை மலக்குகள் (வானவர்கள்) சுமந்து வருவார்கள்; நீங்கள் முஃமின்களாக இருப்பின் நிச்சயமாக இதில் உங்களுக்கு அத்தாட்சி இருக்கின்றது" என்று கூறினார்.







சமூக சேவகர்
லார்ட்ஸ் ம.பால்ராஜ்
தலைவர் & நிறுவனர்




உ.த.மு.க
U.T.M.K

உலக தமிழர்கள் முன்னேற்ற கழகம்

100% ஊழலற்ற மக்களுக்கான சேவை அரசியல் WWW.LORDSCLUBS.COM









**द्रव्ययज्ञास्तपोयज्ञा**
**योगयज्ञास्तथापरे ।**
**स्वाध्यायज्ञानयज्ञाश्च**
**यतयः संशितव्रताः ॥ २८ ॥**

விரதங்களை நன்கு பாதுகாக்கும் முனிகளில் வேறு சிலர் திரவியத்தால் வேள்வி செய்வோர்; சிலர் தவத்தால் வேட்போர்; சிலர் யோகத்தால் வேட்போர்; சிலர் கல்வியால் வேட்போர்; சிலர் ஞானத்தால் வேட்போர். 28

**अपाने जुह्वति प्राणं**
**प्राणेऽपानं तथाऽपरे ।**
**प्राणापानगती रुद्ध्वा**
**प्राणायामपरायणाः ॥ २९ ॥**

இனி வேறு சிலர் ப்ராணாயாமத்தில் ஈடுபட்டவர்களாய், பிராணன், அபானன் என்ற வாயுக்களின் நடையைக் கட்டுப்படுத்தி அபான வாயுவில் ப்ராண வாயுவையும், ப்ராண வாயுவில் அபானத்தையும் ஆஹுதி பண்ணுகிறார்கள். 29







अपरे नियताहाराः
प्राणान्प्राणेषु जुह्वति ।
सर्वेऽप्येते यज्ञविदो
यज्ञक्षपितकल्मषाः ॥ ३० ॥

வேறு சிலர் உணவை ஒழுங்குப்படுத்தி உயிரை உயிரில் ஆஹுதி செய்கிறார்கள். இவ் வனைவரும் வேள்வி நெறி யுணர்ந்து வேள்வியால் பாவமற்றுப் போயினோர். 30

यज्ञशिष्टामृतभुजो
यान्ति ब्रह्म सनातनम् ।
नायं लोकोऽस्त्ययज्ञस्य
कुतोऽन्यः कुरुसत्तम ॥ ३१ ॥

வேள்வியில் மிஞ்சிய அமுதை யுண்போர் என்று முளதாகிய பிரமத்தை எய்துகிறார்கள். வேள்வி செய்யாதோருக் கிவ் வுலக மில்லை. அவர்களுக்குப் பரலோக மேது, குருகுலத்தாரில் சிறந்தோய்? 31







एवं बहुविधा यज्ञा
वितता ब्रह्मणो मुखे ।
कर्मजान्विद्धि तान्सर्वा-
नेवं ज्ञात्वा विमोक्ष्यसे ॥ ३२ ॥

பிரமத்தின் முகத்தில் இங்ஙனம் பலவித வேள்விகள் விரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் தொழிலிலே பிறப்பனவென்றுணர். இவ்வாறுணர்ந்தால் விடுதலை பெறுவாய். 32

श्रेयान्द्रव्यमयाद्यज्ञा-
ज्ज्ञानयज्ञः परन्तप ।
सर्वं कर्माखिलं पार्थ
ज्ञाने परिसमाप्यते ॥ ३३ ॥

பரந்தபா, திரவியத்தைக் கொண்டு செய்யப்படும் வேள்வியைக்காட்டிலும் ஞான வேள்வி சிறந்தது. பார்த்தா, கர்மமெல்லாம், முற்றிலும், ஞானத்தில் முடிவு பெறுகிறது. 33







तद्विद्धि प्रणिपातेन
परिप्रश्नेन सेवया ।
उपदेक्ष्यन्ति ते ज्ञानं
ज्ञानिनस्तत्त्वदर्शिनः ॥ ३४ ॥

அதனை வணக்கத்தாலும், சூழ்ந்த கேள்வியாலும், தொண்டு புரிவதாலும் அறிந்துகொள். உண்மை காணும் ஞானிகள் உனக்கு ஞானத்தை யுபதேசிப்பார்கள். 34

यज्ज्ञात्वा न पुनर्मोह-
मेवं यास्यसि पाण्डव ।
येन भूतान्यशेषेण
द्रक्ष्यस्यात्मन्यथो मयि ॥ ३५ ॥

அந்த ஞானம் பெறுவதனால், பாண்டவா, நீ அப்பால் இவ்வித மயக்க மெய்தமாட்டாய். இதனால் நீ எல்லா உயிர்களையும், மிச்சமின்றி நின்னுள்ளே காண்பாய். அப்பால் அவற்றை என்னுள்ளே காண்பாய். 35




**अपि चेदसि पापेभ्यः सर्वेभ्यः पापकृत्तमः ।**
**सर्वं ज्ञानप्लवेनैव वृजिनं सन्तरिष्यसि ॥ ३६ ॥**


பாவிகளெல்லாரைக் காட்டிலும் நீ அதிகப்
பாவியாக இருந்தாலும், அப் பாவத்தை யெல்
லாம் ஞானத் தோணியால் கடந்து செல்வாய்.

**यथैधांसि समिद्धोऽग्निर्भस्मसात्कुरुतेऽर्जुन ।**
**ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा ॥३७**

நன்கு கொளுத்துண்ட தீ விறகுகளைச் சாம்ப
ராக்கி விடுதல் போலவே, அர்ஜுனா, ஞானத்
தீ எல்லா வினைகளையும் சாம்ப ராக்கிவிடும். 37

**न हि ज्ञानेन सदृशं पवित्रमिह विद्यते ।**
**तत्स्वयं योगसंसिद्धः कालेनात्मनि विन्दति ॥३८**

ஞானத்தைப் போல் தூய்மை தரும் பொருள்
இவ்வுலகத்தில் வேறெதுவுமில்லை. யோகத்தில்
நல்ல ஸித்தி யடைந்தவன் தானாகவே தக்க
பருவத்தில் அதைத் தனக்குள் கிடைக்கப்
பெறுகிறான். 38






श्रद्धावाँल्लभते ज्ञानं तत्परः संयतेन्द्रियः ।
ज्ञानं लब्ध्वा परां शान्तिमचिरेणाधिगच्छति ॥

பிரம்த்தைப் பரமாகக்கொண்டு, இந்திரியங்களைக் கட்டுப்படுத்தியவனாய், சிரத்தை யுடையோன் ஞானத்தை யடைகிறான். ஞானத்தை யடைந்தபின் விரைவிலே பரசாந்தி பெறுகிறான். 39

अज्ञश्चाश्रद्दधानश्च संशयात्मा विनश्यति ।
नायं लोकोऽस्ति न परो न सुखं संशयात्मनः ॥

அறிவும் சிரத்தையுமின்றி ஐயத்தை இயல்பாகக் கொண்டோன் அழிந்துபோகிறான். ஐயமுடையோனுக்கு இவ்வுலகு மில்லை; மேலுலகு மில்லை; இன்பமு மில்லை. 40

योगसंन्यस्तकर्माणं ज्ञानसञ्छिन्नसंशयम् ।
आत्मवन्तं न कर्माणि निबध्नन्ति धनञ्जय ॥४१॥

யோகத்தால் செய்கைகளைத் துறந்து, ஞானத்தால் ஐயத்தை அறுத்துத் தன்னைத் தான் ஆள்வோனை, தனஞ்சயா! கர்மங்கள் கட்டுப் படுத்தமாட்டா. 41

தொடரும்.....

# Watching Russia's invasion of Ukraine, I saw logistics flaws

**Logistics in war is hardly glamorous. But the first phase of Russia's invasion of Ukraine exposed fateful failures in the attacker's military support system.**



War stories tend to be reported from the front lines of battle. While these stories are captivating, they often overlook the important supporting elements, or logistics, of combat. How do soldiers get their bullets when they join the battlefield? Where does their clean drinking water come from? And their fuel? Who ensures there is medical equipment available should someone get hurt? Who comes to get a vehicle and fix it or tow it away when it breaks down?

These aspects of war occur in the shadows, and support soldiers can receive little public acknowledgement or recognition for their work unless they fail to keep up with the demands of war.

In recent weeks, I watched the first phase of Russia's invasion of Ukraine turn into a logistics nightmare hampered by the complexities of war. What initially seemed a relatively straightforward invasion by Russian forces into neighboring Ukraine turned, according to on-the-ground news reports, into a soldier's nightmare of equipment losses, broken down vehicles, fuel shortages, hungry troops and medical crises.

As the world watched Russia's military sit on the border for weeks before the invasion, I had assumed that care was being taken to ensure required materials were on hand to support the mission to take Kiev, 380 kilometers from Russia's border. But as the invasion unfolded, observers noticed that some elements of the Russian military were underprepared, undertrained and undersupported.

There were images of abandoned vehicles, hungry conscripts turning themselves in and overloaded ammunition trucks driving on gravel roads — red flags of a military operation gone wrong.

Our logistics unit supplied water, bullets, fuel, medical equipment and food.

Since the start of the invasion, I have often thought about my time as a soldier in Baghdad working in a support battalion, where we were tasked with meeting the medical, mechanical and transportation needs of our counterparts in light infantry.
My unit was responsible for supplying water, bullets, fuel, medical equipment and food. We planned and executed convoys that traveled around Iraq while we managed base support operations ensuring the needs of more than 5,000 soldiers on our small outpost south of the capital were met.

When one of our infantry units was hit by a roadside bomb, soldiers protected it while support troops mobilized recovery vehicles to tow it back to base. When a soldier was hurt in battle, our unit provided a small clinic to stabilize them before airlifting them to a larger base. When troops were tired, hungry or thirsty, they got the rest, food and the potable water they needed whenever and wherever possible.
Watching Russian soldiers leave vehicles on the roadside and tanks disabled across Ukraine, I think of how I was taught to never leave a disabled vehicle, soldier, body or unit anywhere on the battlefield.
I spent days learning preventative maintenance — checking truck tires, oil levels and weapons each day to make sure they were ready. We made sure trucks did not exceed their load capacity, that the roads could support vehicles and that they had adequate oil, clean windows and the weapon systems for long days on the road.

We had on standby “fix forward” mechanics who were taught to get vehicles back up and running in the heat of battle. We trained and deployed using “Meals Ready to Eat” — highly caloric food that can nourish soldiers for weeks and are distributed to soldiers before any mission.
We briefed soldiers on supplies, support, logistics, firepower, intelligence, road conditions and basic lifesaving skills. We required soldiers to rest and had plans that allowed for refuel, resupply and basic human care in battle.
Russia’s convoy was a sitting duck.

During the first phase of the war in Ukraine, Russian forces seemed not to follow the same script. A portion of Russia’s military in Ukraine has reportedly been conscripted, meaning they are forced to fight the military. They are reported to have little logistics training.
Videos on social media have shown trucks overloaded with ammunition. The large number of vehicle accidents suggests Russian solders are not getting rest. Morale is reportedly low. Some food with Russian units apparently has an expiration date of 2002.

Because Russia did not seize control of Ukraine’s rail network, the long convoy leading into Kiev in the early weeks of the war was forced to circulate on a single-lane highway. When a tank or truck broke down or ran out of fuel, other vehicles had to go around it, snarling traffic in both directions. Supply trucks were unable to drive the length of the convoy to resupply units or to clear the road.

To this intelligence analyst, the convoy was a sitting duck. Mud on either side of the road made leaving the highway difficult for overburdened trucks, and the tanks were too heavy for many types of gravel or country roads. Add to this the reported lack of supply vehicles and troops, and it is understandable why Russia may have had difficulty sustaining a full-scale invasion.

Alleged war crimes in Ukraine point to a frustrated, tired and desperate military with low morale and lacking logistical support and equipment. Despite upbeat comments from Russian President Vladimir Putin, the Kremlin’s decision to focus on the pro-Russia area of Donbas, which can be supplied by trains, suggests it has abandoned its early efforts to take Kiev and the whole of Ukraine.
Russia has yet to acknowledge any significant losses of equipment across Ukraine, and its estimates of soldiers killed in battle are far below estimates by Ukraine or the West.
Russia’s incursion in Ukraine highlights the critical importance of the logistics soldier and has thrown a harsh spotlight on the invaders’ failure to prepare and supply their troops in the first phase of the war.






**Lords B. Palanivelrajan**
Lords Club of Nagai - Club Member



**Lords S. SUNDAR**
Lords Club of Nagai - Club Member



**Lords V. NATARAJAN**
Lords Club of Nagai - Club Member

லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் சர்வதேச சமூக சேவை நிறுவனத்தின் தலைவர் சர்வதேச சமூகசேவகர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் அவர்கள் சர்வதேச அளவில் உள்ள லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் அனைத்து கிளைகளுக்கும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகள் தோறும் தவறாமல் காலை ஒரு மணி நேரம் பொதுக்கூட்டங்கள் நடத்தி அந்தப் பொதுக்கூட்டத்தில் அந்தந்தப் பகுதி வாழ் பொதுமக்களுக்கு அனைத்து விதமான நன்மைகளையும் சமூக சேவைகளையும் செய்ய வேண்டும் என்றும் மேலும் அந்த கூட்டத்தில் பங்கேற்கும் லார்ட்ஸ் உறுப்பினர்கள் அனைவரின் பொருளாதார முன்னேற்றம் செழித்தோங்குவதற்காகவும் அனைத்து லார்ட்ஸ் உறுப்பினர்களுக்கும் அந்த பொதுக் கூட்டத்தில் கலந்தாய்வு நடத்த வேண்டும் என்றும் சர்வதேச அளவில் சென்ற மாதம் உத்தரவிட்டுள்ளார்.

அதன் விளைவாக 10.04.2022 ஞாயிறு அன்று நடந்த பொதுக்கூட்டத்தில் நாகப்பட்டினம் மாவட்டடம், வேதாரண்யம் வட்டம், பன்னாள் கிராமத்தில் நீண்ட ஆண்டுகளாக சாலை ஆக்கிரமிப்பு அகற்றப்படாமல் நடவடிக்கைகள் எடுக்க முடிவு செய்யப்பட்டு அடுத்த இரண்டு தினங்களுக்குள் அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்றப்பட்டது.
இதற்காக உழைத்த லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் நாகப்பட்டினம் கிளை உறுப்பினர்கள் அனைவருக்கும் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் சர்வதேச தலைவர் சர்வதேச சமூக சேவகர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் அவர்கள் நாகை கிளப் உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறி நல்வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டுள்ளார்.

லார்ட்ஸ் ம.பால்ராஜ் அவர்கள் மேலும் அந்தப் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் கோடை காலம் முடிவடைந்தவுடன் அனைத்து இடங்களிலும் ஆக்சிஜன் அதிகம் வெளியிடும் மரக்கன்றுகள் நட்டு மீண்டும் ஆக்கிரமிப்பு நடைபெறாமலும் அப்பகுதி வாழ் பொது மக்களுக்கு நோய்நொடிகள் ஏற்படாமலும் தொடர்ந்து அவர்களைப் பாதுகாத்து வர வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.



**Lords P. DHINAKARAN**
Lords Club of Nagai - Club Member



**Lords G.RAMACHANDRAN**
Lords Club of Nagai - Club Member




**Lords S. ILAYARAJA**
Lords Club of Nagai - Club Member












The historical facts of the first four religions of the world's population ...

Foundations of Christianity from the 1st century to the present day, which is fully spread in many countries

1. The Bible
2. Jesus Christ
3. Theology
4. History Tradition
5. Religious groups

Foundations of Buddhism spread from the 6th century BC to the present day in the world only in China :

1. The life of the Buddha
2. Early period of Buddhism
3. Conversion in the Hellenistic world
4. Establishment of Sri Lankan Buddhism
5. Mahayana Buddhism

Foundations of the religion of Islam, which originated in the early 7th century AD and is still widespread in some parts of the world :

1. The Quran
2. Ahl al-Bayt Sahaba Rashidun
3. Caliph Imam Medieval
4. The spread of Islam is the successor of Muhammad
5. Culture and community

Foundations of Hinduism, which has not been fully spread to this day in any country in the world, created by the Brahmins in conjunction with both Jainism and Buddhism.

1. Hindutva
2. New Hindu movements
3. The Hindu Renaissance
4. Bhakti Vedanta
5. Brahmanism

உலக மக்களின் முதலிடத்தில் உள்ள முதல் நான்கு மதங்களின் வரலாற்று உண்மைகள்...

1 ஆம் நூற்றாண்டு தோன்றி இன்றுவரை பல நாடுகளில் முழுமையாக பரவியுள்ள கிருஸ்தவ மதத்தின் அடித்தளங்கள் :

1. பைபிள்
2. இயேசுகிறிஸ்து
3. இறையியல்
4. வரலாறு பாரம்பரியம்
5. மதகுழுக்கள்

கிமு 6 ஆம் நூற்றாண்டில் துவங்கி இன்றுவரை உலகில் சீனாவில் மட்டும் முழுமையாக பரவியுள்ள பௌத்தமதத்தின் அடித்தளங்கள் :

1. புத்தரின் வாழ்க்கை
2. பௌத்தம் ஆரம்ப காலம்
3. ஹெலனிஸ்டிக் உலகில் மதமாற்றம்
4. இலங்கை பௌத்தத்தை நிறுவுதல்
5. மகாயான பௌத்தம்

கிபி 7 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றி இன்றுவரை உலகில் சில நாடுகளில் முழுமையாக பரவியுள்ள இஸ்லாமிய மதத்தின் அடித்தளங்கள் :

1. குரான்
2. அஹ்ல் அல்-பைத் சஹாபா ரஷிதுன்
3. கலிபா இமாமத் இடைக்காலம்
4. இஸ்லாத்தின் பரவல் முஹம்மதுவின் வாரிசு
5. கலாச்சாரம் மற்றும் சமூகம்

சமணம் மற்றும் பௌத்தம் இரண்டையும் இனைத்து பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்ட உலகில் ஒரு நாட்டிலும் முழுமையாக இன்றுவரையில் பரவாத இந்து மதத்தின் அடித்தளங்கள் :

1. இந்துத்துவா
2. புதிய இந்து இயக்கங்கள்
3. இந்து மறுமலர்ச்சி
4. பக்தி வேதாந்தம்
5. பிராமணியம்